# இலக்கணம் - அறிமுகநிலை





www.tamilacademy.com

www.noolagam.org

# தமிழ் இலக்கணம் முதல்நிலை - அறிமுகம்

மனிதன் தனது கருத்தைத் தெரிவிப்பதற்குக் கருவியாய் இருப்பது மொழியாகும். சிறுவயதிலிருந்தே மனிதர்கள் தங்கள் தாய்மொழியில் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்கிறார்கள். அவ்வாறு கற்றுக்கொண்டாலும் அம்மொழிக்குரிய இலக்கணங்களையும் தெரிந்திருக்க வேண்டும். இச்சிந்தனை எல்லா மொழிகளுக்கும் பொதுவானவை. உலக மொழிகளுள் பழமையும் பெருமையும் வாய்ந்த மொழி தமிழ்மொழி. தமிழ்மொழி இலக்கிய, இலக்கண வளம் உடையது.

## இலக்கணம்:-

இலக்கணம் என்பது மொழிக்கான வரையறை. ஒரு மொழியை எப்படிப் பேசவேண்டும், எழுதவேண்டும் என்ற விதிகளை இலக்கணம் வகுக்கின்றது. அந்தவகையில் தமிழ்மொழியின் இலக்கணங்களைத் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம் போன்ற நூல்கள் எடுத்துரைக்கின்றன.

தமிழ் இலக்கணத்தை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐந்து வகைப்படுத்துவர்.

## எழுத்திலக்கணம்:-

மனிதன் பேசக் கற்றுக்கொண்டபின், நாகரீகம் வளர்ச்சி பெற்றது. நாகரீக வளர்ச்சியினால், தான் பேசியதை எழுதி வைக்க வேண்டிய சூழல் அவனுக்கு ஏற்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட வரிவடிவத்திற்கு எழுத்து என்று பெயர். எழுதப்பட்டதனால் எழுத்து என்றும் கூறுவர்.

நாம் பேசுகின்ற மொழி சொற்களால் ஆனது. சொல் எழுத்துக்களால் ஆனது. ஆதலால் எழுத்தே சொல்லுக்கு அடிப்படை.

## எழுத்துக்களின் வகை:-

தமிழ் எழுத்துக்கள் முதல் எழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் என இரு வகைப்படும்.

## முதல் எழுத்துக்கள்:-

உயிரெழுத்துக்கள் 12-ம் மெய்யெழுத்துக்கள் 18-ம் சேர்ந்த முப்பது எழுத்துக்களும் முதல் எழுத்துக்களாகும். தமிழ் மொழியிலுள்ள பிற எழுத்துக்கள் பிறப்பதற்கு இவை ஆதாரமாக இருப்பதால் இவற்றை முதல் எழுத்துக்கள் என்பர்.

## உயிர் எழுத்துக்கள்:-

தமிழ் மொழிக்கு உயிர் நாடியாய் விளங்கும் அ முதல் ஔ வரையிலான 12 எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள் எனப்படும். உயிர் எழுத்துக்கள் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது. உயிரெழுத்துக்களை குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் , சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள் என நான்கு வகையாகப் பிரிப்பர்.

| | |
|---|---|
| **குற்றெழுத்துக்கள்** | **அ,இ, உ, எ, ஒ** |
| **நெட்டெழுத்துக்கள்** | **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** |
| **சுட்டெழுத்துக்கள்** | **அ, இ, உ** |
| **வினா எழுத்துக்கள்** | **ஆ, ஏ, ஓ** |

## குற்றெழுத்தும் நெட்டெழுத்தும்:-

குறுகிய ஓசையுடைய எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள். நீண்ட ஓசையுடைய எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் எனப்படும். குற்றெழுத்து, நெட்டெழுத்து வேறுபாட்டை நாம் நன்கு உணர வேண்டும் . அவ்வாறு இல்லையெனில் பொருளே மாறுபடும்.

**சான்று:-**

**அல்** என்பதன் பொருள் --- **இருள்**

**ஆல்** என்பதன் பொருள் --- **ஆலமரம்**

## சுட்டெழுத்தும் வினா எழுத்தும்:-

ஒரு பொருளையோ அல்லது ஒரு நபரையோ குறிப்பிட்டு க் கூறுவதற்குப் பயன்படக்கூடிய எழுத்துக்களை ச் சுட்டெழுத்துக்கள் என்பர்.

**சான்று:-**

அவன் தான் நடந்தான்

இவன் தான் செய்தான்

## வினா எழுத்துக்கள்:-

வினா அமைப்பதற்குப் பயன்படக் கூடிய எழுத்துக்களை வினா எழுத்துக்கள் என்பர்.

**சான்று:-**

வருவான் + **ஆ** = வருவா**னா**?

கொடுத்தான் + **ஓ** = கொடுத்தா**னோ**?

## மெய் எழுத்துக்கள்:-

**க்** முதலாக **ன்** வரையிலான 18 எழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் எனப்படும்.

## வல்லினம்:-

வன்மையான ஓசையுடைய மெய் எழுத்துக்களை வல்லினமெய் என்பர்.

**க் ச் ட் த் ப் ற்** - சக்கரம், பச்சை, பட்டம், மத்தாப்பு, பாப்பா, கற்க

## மெல்லினம்:-

மென்மையான ஓசையுடைய மெய் எழுத்துக்களை மெல்லினமெய் என்பர்.

**ங் ஞ் ண் ந் ம் ன்** - தங்கம், மஞ்சள், மண், தந்தம், அறம், பொன்

## இடையினம்:-

வல்லினம், மெல்லினம் இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடைய மெய் எழுத்துக்களை இடையினமெய் என்பர்.

**ய் ர் ல் வ் ழ் ள்** - மெய், கார், பால், செவ்வானம், தமிழ், கேள்

## மாத்திரை:-

மாத்திரை என்பது எழுத்துக்களை உச்சரிக்கக் கூடிய கால அளவு. ஒரு எழுத்தை எவ்வளவு நேரம் உச்சரிக்க வேண்டும் என்பது மொழியின் அறிவியல் நிலையைக் காட்டுகிறது. கண்ணிமைப் பொழுதும் கைநொடிப் பொழுதும் மாத்திரை எனப்படும்.

# எழுத்துக்களின் மாத்திரை அளவு:-

குறில் = 1 மாத்திரை

நெடில் = 2 மாத்திரை

மெய் = ½ மாத்திரை

ஆய்தம்.= ½ மாத்திரை

## சார்பெழுத்துக்கள்:-

தனித்து இயங்கும் ஆற்றலின்றி உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் சார்ந்து இயங்கும் எழுத்துக்களை ச் சார்பெழுத்துக்கள் என்பர்.

## சார்பெழுத்து வகைகள்:-

சார்பெழுத்துக்கள் **பத்து** வகைப்படும். அவை:-

1.உயிர்மெய்,

2.ஆய்தம்,

3.உயிரளபெடை,

4.ஒற்றளபெடை,

5.குற்றியலிகரம்,

6.குற்றியலுகரம்,

7.ஐகாரக்குறுக்கம்,

8.ஔகாரக்குறுக்கம்,

9.மகரக்குறுக்கம,.

10.ஆய்தக்குறுக்கம்.

# உயிர்மெய்:-

உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் இணைந்து உருவாகும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் ஆகும் . உயிர் எழுத்துக்கள் 12-ம், மெய்யெழுத்துக்கள் 18-ம் ஒன்றோடொன்று இணைந்து மொத்தம் 216 உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகின்றன.

**மெய் + உயிர் = உயிர்மெய்**

18 * 12 = 216

க் + அ = க

ம் + அ = ம

உயிரும் மெய்யும் இணையும்போது மெய்யெழுத்து முதலாவதாக அமைந்து, அவற்றின் மீது உயிரெழுத்து வந்து இணைந்தே உயிர்மெய் தோன்றும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## ஆய்த எழுத்து:-

மூன்று புள்ளிகளை உடையது ; ஃ என்று எழுதப்படும். ஆய்த எழுத்து தனித்து நின்றோ , பிற எழுத்துக்களைச் சார்ந்தோ இயங்காது. இது மொழிக்கு முதலில் உயிரெழுத்தையும் இறுதியில் வல்லின உயிர்மெய்யையும் பெற்று இடையில் வரும்.

### சான்று:-

எஃகு, அஃது.

## அளபெடை:-

செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் அவ்வோசையை நிறைவு செய்வதற்காக எழுத்துக்கள் தம் இயல்பான அளவிலிருந்து நீண்டு ஒலிப்பது அளபெடை ஆகும்.

## அளபெடை வகைகள் :-

அளபெடை **இரண்டு** வகைப்படும் அவை:-

- உயிரளபெடை.
- ஒற்றளபெடை.

## உயிரளபெடை:-

செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்வதற்காக உயிர் எழுத்துக்கள் தமக்குரிய மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிப்பதே உயிரளபெடை ஆகும். உயிர் எழுத்துக்கள் அளபெடுக்கும் பொழுது இரண்டு மாத்திரையிலிருந்து மூன்று மாத்திரையாக மிகுந்து ஒலிக்கும்.

## உயிரளபெடையின் வகைகள்:-

உயிரளபெடை **மூன்று** வகைப்படும். அவை :-

- செய்யுளிசை அளபெடை.
- இன்னிசை அளபெடை.
- சொல்லிசை அளபெடை.

## செய்யுளிசை அளபெடை:-

செய்யுளில் ஓசை குறையும் போது, அவ்வோசையை நிறைவு செய்தற்பொருட்டு சொல்லின் முதல், இடை, இறுதியிலுள்ள உயிர்நெடில் எழுத்துக்கள் அளபெடுத்து வருவதைச் செய்யுளிசை அளபெடை என்பர். செய்யுளிசை அளபெடைக்கு மற்றொரு பெயர் இசைநிறை அளபெடை ஆகும்.

**சான்று**:-

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

'**உழாஅர்**' என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது. உழார் என்பதே இயல்பான சொல். இச்சொல் செய்யுளின் இடையில் ஓரசையாகி ஓசை குறைந்து நிற்கிறது. இவ்வாறு வரும்போது செய்யுளில் தளை தட்டும். தளை தட்டாமல் இருத்தல், ஓசையை நிறைவு செய்தலின் பொருட்டு சொல்லின் இடையில் உள்ள '**ஆ**' என்னும் உயிரெழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து மிகுந்து ஒலிக்கின்றது. இதற்கு அடையாளமாக இவ்வெழுத்தின் இனமான '**அ**' எனும் குறிலெழுத்து அருகில் அமைந்துள்ளது.

## இன்னிசை அளபெடை:-

செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு உயிர்க்குறில் நெடிலாகி, மேலும் அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**சான்று**:-

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

**'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்'** என்ற சொற்கள் அளபெடுத்து வந்துள்ளன. கெடுப்பதும், எடுப்பதும் என்பன இயல்பான சொற்கள். இவை இயல்பாக வரும்போது ஓசை குறையவில்லை. இருப்பினும் இவை கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என 'து' என்னும் குறில் எழுத்து 'தூ' என்னும் நெடில் எழுத்தாகி, அவை மேலும் 'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்' என்று அளபெடுத்து இனிய ஓசையைத் தருகின்றது. இவ்வாறு இனிய ஓசையின் பொருட்டு அளபெடுத்துள்ளதால் இது இன்னிசை அளபெடை ஆகும்.

## சொல்லிசை அளபெடை:-

செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், பெயர்ச்சொல்லை வினைச்சொல்லாக மாற்றும் பொருட்டு உயிரெழுத்து அளபெடுத்தலைச் சொல்லிசை அளபெடை என்பர்.

**சான்று**:-

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

இக்குறளில் **'தழீ'** என வந்தாலும் செய்யுளின் ஓசை குறைவதில்லை. **'தழீ'** என்பது தழுவுதல் எனப் பொருள் தரும் பெயர்ச் சொல்லாகும். அச்சொல் 'தழீஇ' என அளபெடுத்து வினைஎச்சப் பொருள் தருகிறது.

## ஒற்றளபெடை:-

செய்யுளில் ஓசை குறையும் பொழுது, அதனை நிறைவு செய்வதற்குச் சொல்லிலுள்ள மெய்யெழுத்து (ஒற்றெழுத்து) அளபெடுத்தலையே ஒற்றளபெடை என்பர். மெய்யெழுத்து அளபெடுக்கும் பொழுது, தமக்குரிய அரை மாத்திரையிலிருந்து ஒரு மாத்திரையாக மிகுந்து ஒலிக்கும். வரிவடிவத்தில் இதற்கு அடையாளமாக வந்த மெய்யெழுத்தே பக்கத்தில் எழுதப்படும்.

மெய்யெழுத்துக்களுள் **ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்** ஆகிய **பத்து** மெய்யெழுத்துகளும் ஆய்த எழுத்தும் அளபெடுக்கும். சொல்லின் இடையிலும் இறுதியிலும் மட்டுமே ஒற்றளபெடை வரும்.

**சான்று**:-

இலங்ங்கு வெண்பிறை- **'ங்'** என்ற மெய் அளபெடுத்துள்ளது.
மடங்ங்கலந்த மனன்- **'ங்'** என்ற மெய் அளபெடுத்துள்ளது.
எஃஃகிலங்கிய கையர்- ஆய்தம் அளபெடுத்துள்ளது.

## குற்றியலுகரம்:-

தனிக்குறிலைச் சாராது, வல்லின மெய் மீது ஏறி வரும் உகரம் சொல்லின் ஈற்றில் வந்து ஓசை குறைந்து ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

**சான்று**:-

பாகு, பஞ்சு, வீடு,காது, தாம்பு, ஆறு.

## குற்றியலுகர வகைகள் :-

குற்றியலுகரம் **ஆறு** வகைப்படும் அவை:-

- நெடில் தொடர்க் குற்றியலுகரம்,
- ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்,

- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்,
- வன்தொடர்க் குற்றியலுகரம்,
- மென்தொடர்க் குற்றியலுகரம்,
- இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

## நெடில் தொடர்க் குற்றியலுகரம்:-

தனியாக உள்ள நெடில் எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வந்தால் அது நெடில் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று**:-

பா**கு**, தூ**சு**, நா**டு**, யா**து**, பா**பு**, நூ**று**

## ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்:-

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வந்தால் அது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று**:-

கஃ**சு**, அஃ**து**, எஃ**கு**

## உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்:-

உயிர் எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வந்தால் அது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று**:-

மிள**கு**, முர**சு**, சர**டு**, எரு**து**, உரு**பு**, கிண**று**.

## வன்தொடர்க் குற்றியலுகரம்:-

வல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வந்தால் அது வன்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று**:-

பாக்கு, அச்சு, பூட்டு, பத்து, உப்பு, காற்று.

## மென்தொடர்க் குற்றியலுகரம்:-

மெல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வந்தால் அது மென்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று**:-

நுங்**கு**, பஞ்**சு**, வண்**டு**, பந்**து**, அம்**பு**, கன்**று**.

## இடைத் தொடர்க் குற்றியலுகரம்:-

இடையின மெய் எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துக்கள் வந்தால் அது இடைத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று**:-

மூழ்**கு**, செய்**து**, மார்**பு**, சால்**பு**

## குற்றியலிகரம்:-

குற்றியலுகரம் தன் அளவில் குறைந்து ஒலிப்பதைப் போன்றே, குற்றியலிகரமும் அளவிற் குறைந்து ஒலிப்பதால் இப்பெயரைப் பெற்றுள்ளது.

நாடு + யாது? = நாடியாது?

சால்பு + யாது? = சால்பியாது?

**நாடு**, **சால்பு**, என்னும் சொற்களில் இறுதி எழுத்து குற்றியலுகரமாகும்.அவற்றோடு வந்து சேரும் சொல்லின் முதலெழுத்து 'யா' என்பதாகும். குற்றியலுகரத்துடன் 'யா' என்னும் எழுத்து வந்து

சேரும் போது குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிகிறது. இதுவும் குற்றியலுகரத்தைப் போன்று ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கிறது.

## ஐகாரக்குறுக்கம்:-

சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். இதை ஐகாரக்குறுக்கம் என்று கூறுவர். **ஐ** என்கிற உயிர் எழுத்து சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும்.

**சான்று**:-

**ஐ**ப்பசி, **வை**கல் — முதல்
**க**டை**சி**, இ**றை**வன் — இடை

ம**ழை**, ந**கை**, க**டை** — இறுதி

## ஔகாரக்குறுக்கம்:-

சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாக ஒலிப்பதை ஔகாரக் குறுக்கம் என்று கூறுவர்.

**சான்று**:-

**ஔ**வையார், **வௌ**வால்

## மகரக்குறுக்கம்:-

மகர மெய் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிப்பதை மகரக்குறுக்கம் என்பர்.

**சான்று**:-

மருண்**ம்**
போன்**ம்**

## ஆய்தக்குறுக்கம்:-

சொல்லின் இடையில் வரும் ஆய்த எழுத்து அரை மாத்திரையில் இருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும். இதுவே ஆய்தக் குறுக்கம் எனப்படுகிறது.

**சான்று:-**

எஃகு, வெஃகு

## சொல்லிலக்கணம்:-

எழுத்துக்கள் தனித்தோ , தொடர்ந்தோ பொருள் தருமாயின் அது சொல் எனப்படும். பொருளை அறிவதற்குக் கருவியாய் இருப்பது சொல் எனப்படும்.

**சொல்**

| **இலக்கண அடிப்படையில்** | **இலக்கிய அடிப்படையில்** |
|---|---|
| பெயர்ச்சொல் | இயற்சொல் |
| வினைச்சொல் | திரிசொல் |
| இடைச்சொல் | திசைச்சொல் |
| உரிச்சொல் | வடசொல் |

## இலக்கண அடிப்படையில் சொல் வகைகள்:-

## பெயர்ச்சொல்:-

பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல்லாகும். பெயர்ச்சொல் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இரு வகையில் அமையும்.

## இடுகுறிப்பெயர்:-

காரணம் ஏதும் இல்லாமல் முன்னோரால் இடப்பட்டு காலங்காலமாக வழங்கி வரும் பெயரே இடுகுறிப்பெயர்.

**சான்று:-**

கல், மண்

## காரணப்பெயர்:-

ஒரு பொருளுக்கு ஏதேனும் ஒரு காரணத்தைக் கருதி இட்ட பெயரே காரணப்பெயர்.

**சான்று:-**

வளையல் (வளைந்திருப்பதால்)

நாற்காலி (நான்கு கால்கள் இருப்பதால்)

## பெயர்ச்சொல் வகைகள்:-

பெயர்ச்சொல் **ஆறு** வகைப்படும். அவை:

**பொருட் பெயர்** :- மரம், கல், மண்.

**இடப் பெயர்** :- ஊர், திருச்சி, கோவை.

**காலப் பெயர்** :- ஆண்டு, கிழமை, மாதம்.

**சினைப் பெயர்** :- கை, கால், கண்.

**குணப் பெயர்** :-பசுமை, இனிமை, கருமை.

**தொழில் பெயர்** :- எழுதுதல், ஆடுதல், பாடுதல்

மேலும் பெயரில் தன்மைப்பெயர் (first person), முன்னிலைப்பெயர் (second person), படர்க்கைப்பெயர் (third person), போன்றவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தன்மைப்பெயர்(first person):-

பேசுபவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறித்து வரும் பெயர் தன்மைப்பெயர் எனப்படும். இதில்ஒருவரைக் குறிப்பது தன்மை ஒருமைப் பெயர் . பலரைக் குறிப்பது தன்மை பன்மைப் பெயர்.

நான் = தன்மை ஒருமை

நாங்கள் = தன்மைப் பன்மை

## முன்னிலைப்பெயர்(second person):-

பேசுபவனது சொற்களை முன்நின்று கேட்பவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் உணர்த்தி வரும் பெயர் முன்னிலைப்பெயர். இதில் ஒருவரைக் குறிப்பது முன்னிலை ஒருமைப்பெயர். பலரைக் குறிப்பது முன்னிலை பன்மைப்பெயர்.

நீ = முன்னிலை ஒருமைப் பெயர்

நீங்கள் = முன்னிலை பன்மைப் பெயர்

## படர்க்கைப்பெயர்(third person):-

பேசுபவன், அதைக் கேட்பவன் தவிர்த்து பிற அனைத்தும் படர்க்கைப்பெயர்.

## திணை:-

திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும். இது உயர்திணை, அஃறிணை என இரண்டு வகைப்படும்.

## உயர்திணை:-

பகுத்து அறியும் தன்மை உள்ளவற்றை உயர்திணை என்பர்.

**சான்று:-**

மனிதர்கள்

## அஃறிணை:-

பகுத்து அறியும் தன்மை இல்லாதவற்றை அஃறிணை என்பர். மனிதர்களைத்தவிர்த்த பிற அனைத்தும் அஃறிணையின்பாற்படும்.

**சான்று:-**

விலங்குகள், பறவைகள்

## பால்:-

பால் என்பது பகுப்பு அல்லது பிரிவு எனப்படும். அது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும். முதல் மூன்று பால்கள் உயர்திணைக்கும் பிற அஃறிணைக்கும் உரியவை.

**ஆண்பால்**: ஆணைக் குறிப்பது ஆண்பால்
கந்தன், மணி

**பெண்பால்**: பெண்ணைக் குறிப்பது பெண்பால்
கீதா, ராதா

**பலர்பால்**: பலரைக் குறிப்பது பலர்பால்
மாந்தர், மக்கள்

**ஒன்றன்பால்**: அஃறிணை. ஒருமையைக் குறிப்பது ஒன்றன்பால்
மாடு, கிளை

**பலவின்பால்**: அஃறிணை பன்மையைக் குறிப்பது பலவின்பால்
மாடுகள், கிளைகள்

# வேற்றுமை:-

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை ஆகும்.

**சான்று:-**

கலா லதா கண்டாள்
கலா லதாவைக் கண்டாள்

இரண்டு தொடர்களையும் நோக்கும்போது முதல் தொடரில் பொருள் விளங்கவில்லை. ஆனால், இரண்டாவது தொடர் தெளிவான பொருளைத் தருகிறது. இரண்டாவது தொடரில் பொருளை விளக்குவது லதா எனும் பெயரோடு இணைந்துள்ள **'ஐ'** என்ற வேற்றுமை உருபாகும். இவ்வுருபால் லதாவைக் கலா என்பவள் கண்டாள் என்பது தெளிவாகிறது. இவ்வாறு லதா எனும் பெயர்ச் சொல்லோடு **'ஐ'** எனும் வேற்றுமை உருபு இணைந்து பொருளை வேறுபடுத்திக் காட்டுகிறது.

# வேற்றுமை வகைகள்:-

வேற்றுமை **எட்டு** வகைப்படும். அவை:

- முதல்/பெயர் வேற்றுமை
- இரண்டாம் வேற்றுமை
- மூன்றாம் வேற்றுமை
- நான்காம் வேற்றுமை
- ஐந்தாம் வேற்றுமை
- ஆறாம் வேற்றுமை
- ஏழாம் வேற்றுமை
- எட்டாம்/விளி வேற்றுமை

# வேற்றுமை உருபுகள்:-

முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும், உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை - **ஐ**
மூன்றாம் வேற்றுமை - **ஆல்**
நான்காம் வேற்றுமை - **கு**
ஐந்தாம் வேற்றுமை - **இன்**
ஆறாம் வேற்றுமை - **அது**
ஏழாம் வேற்றுமை - **கண்**

# வினைச்சொல்:-

ஒரு செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல்.

**சான்று**:-

எழுதினான், படிக்கிறாள், வரைந்தான்

# வினைச்சொல்லின் தன்மை:-

வினைச் சொற்கள் காலத்தைக் காட்டும் தன்மை கொண்டவை

காலம் மூன்று வகைப்படும். அவை :-

1. இறந்த காலம்.

2. நிகழ் காலம்.

3. எதிர் காலம்.

## இறந்த காலம்:-

நடந்து முடிந்த ஒரு செயலைக் குறிப்பது.

**சான்று**:- எழுதினான், வந்தாள்.

## நிகழ் காலம்:-

நடந்து கொண்டிருக்கும் ஒரு செயலைக் குறிப்பது.

**சான்று**:- செல்கிறான், உண்கிறான், வருகின்றாள்.

## எதிர் காலம்:-

இனி நடக்கவிருக்கும் ஒரு செயலைக் குறிப்பது.

**சான்று**:- வருவாள், படிப்பாள்.

## இடைச்சொல்:-

பெயர், வினைகளைப் போல பெரும்பாலும் தனித்து வராமல் அப்பெயர், வினைகளைச் சார்ந்து வருவது இடைச்சொல்லாகும். **ஏ, ஓ,** மற்றும் **அந்தோ,** போன்றவை இடைச்சொல்லாகும்.

ஏ = நீ தானே எடுத்தாய்?

ஓ =நாயோ நரியோ வந்தது?

அந்தோ = அந்தோ காந்தி இறந்தாரே!

## உரிச்சொல்:-

குணத்தை உணர்த்தி, பெயர், வினைகளுக்கு உரிமை பூண்டு வருவது உரிச்சொல். இவை பெரும்பாலும் செய்யுளுக்கே உரியவை . **சால, தவ, நனி, கூர்** போன்றவை உரிச்சொற்களாகும்.

சாலப் பேசினான்
நனி தின்றான்

## உரிச்சொல் வகைகள்:-

உரிச்சொல் **இரண்டு** வகைப்படும். அவை :-

1. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்
2. பல குணம்தழுவிய உரிச்சொல்

## ஒரு குணம் தழுவிய உரிச்சொல்:-

பல சொற்கள் ஒரே பொருளைத் தருமாயின் அதனை ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்பர். சால , உறு, தவ, நனி, கூர், கழி ஆகிய சொற்கள் "**மிகுதி**" என்ற ஒரே பொருளைத் தரு வதால் இது ஒரு குணம் தழுவிய உரிச்சொல் ஆகும்.

## பல குணம் தழுவிய உரிச்சொல்:-

ஒரு சொல் பல பொருள்களைத் தருவதைப் பல குணம் தழுவிய உரிச்சொல் என்று கூறுவர். **'கடி'** என்ற சொல், காப்பு, கூர்மை, மிகுதி, விரைவு, அச்சம், சிறப்பு, முதலிய பல பொருள்களைத் தரும். எனவே, இது பல குணம் தழுவிய உரிச்சொல் ஆகும்.

## இலக்கிய அடிப்படையில் சொல் வகைகள்:-

## இயற்சொல்:-

கற்றவர்,கல்லாதவர் அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும்படி அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

**சான்று:-**

பூனை, மனிதன், பூ

## திரிசொல்:-

இயல்பு நிலையிலிருந்து மாறி, கற்றவர்கள் மட்டுமே அறிந்து கொள்ளும் வகையில் அமைந்த சொற்களைத் திரிசொற்கள் என்பர்.

**சான்று:-**

தத்தை -- கிளி

ஆழி -- கடல்

புனல் -- நீர்

## திசைச்சொல்:-

வடமொழியல்லாத பிறமொழிச்சொற்கள் அம்மொழிகளில் என்ன பொருளில் வழங்கப்படுகிறதோ, அதே பொருளில் தமிழிலும் வழங்கப்படுமாயின் அதனைத் திசைச்சொல் என்கிறோம்.

**சான்று:-**

பண்டிகை -- திருவிழா

பந்தயம் -- பணயம்

சாவி -- திறவுகோல்

தபால் -- அஞ்சல்

## வடசொல்:-

வடமொழிச்சொல் தமிழில் வந்து தமிழ் இயல்புக்கு ஏற்ப வழங்குவது வடசொல் எனப்படும்.

**சான்று:-**

பட்சி -- பறவை

அரி -- திருமால்

வருடம் -- ஆண்டு

## யாப்பிலக்கணம்:-

யாப்பு என்பது செய்யுள் இயற்றுவதற்குரிய இலக்கணம் ஆகும். யாக்கப்படுவது யாப்பு. யாக்கப்படுதல் என்பதற்கு கட்டப்படுதல்என்று பொருள்.

செய்யுள் – பா, பாட்டு, கவிதை, பாடல்

## செய்யுள் உறுப்புக்கள்:-

செய்யுள் உறுப்புக்கள் **அறு** வகைப்படும். அவை:

1. எழுத்து
2. அசை
3. சீர்
4. தளை
5. அடி
6. தொடை

## எழுத்து:-

தமிழ் எழுத்துக்கள் யாப்பிலக்கணத்தில் குறில், நெடில், ஒற்று (மெய்) என மூன்று வகைகளாக அசைக்கு உறுப்புகளாகி அமைந்துள்ளன.

### சான்று:-

வானம்

வா - நெடில்

ன - குறில்

ம் - ஒற்று

# அசை:-

குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துக்களால் அசைக்கப்படுவது (கட்டப்படுவது) அசை எனப்படும். அசை நேர் அசை, நிரை அசை என இரு வகைப்படும்.

## நேர் அசை:-

1. குறில் தனித்தும் — ப
2. குறில் ஒற்றடுத்தும் — பல்
3. நெடில் தனித்தும் — பா
4. நெடில் ஒற்றடுத்தும் — பால்

வருவது நேர் அசையாகும்.

## நிரை அசை:-

1. குறில் இணைந்தும் — கனி
2. குறில் இணைந்து ஒற்றடுத்தும் — பழம்
3. குறில் நெடில் இணைந்தும் — நிலா
4. குறில் நெடில் ஒற்றடுத்தும் — புலால்

வருவது நிரை அசையாகும்.

## சீர்:-

இருவித (நேர், நிரை) அசைகளும் தனித்தும், இணைந்தும் அமைவது சீர் எனப்படும். அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என **நான்கு** வகைப்படும்.

# ஓரசைச்சீர்:-

வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசைகளுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவை **'அசைச்சீர்'** அல்லது ஓரசைச்சீர் எனப்படும்.

## ஓரசைச்சீர் வாய்பாடுகள்:-

| அசை | வாய்பாடு | சான்று |
|---|---|---|
| நேர் | — நாள் | - பார் |
| நிரை | — மலர் | - தலை |
| நேர்பு | — காசு | - நன்/று |
| நிரைபு — | பிறப்பு | - விளக்/கு |

## ஈரசைச்சீர்:-

நேர், நிரை என்னும் அசைகள் இரண்டிரண்டாக இணைந்து வரும் சீர்கள் ஈரசைச்சீர்கள் எனப்படும்.

| அசை | வாய்பாடு | சீர் |
|---|---|---|
| நேர் நேர் | தேமா | வந்தான் |
| நிரை நேர் | புளிமா | அறைந்தான் |
| நேர் நிரை | கூவிளம் | வந்தது |
| நிரை நிரை | கருவிளம் | பறந்தது |

## மூவசைச்சீர்:-

மேற்கூறிய நான்கு ஈரசைச் சீர்களோடு நேரசை, நிரையசை ஆகிய இரண்டையும் தனித்தனியாக இறுதியில் சேர்த்தால் மூவசைச் சீர்கள்

**எட்டு** உருவாகும். அவற்றுள் காய் என முடியும் காய்ச்சீர் நான்கும், கனி என முடியும் கனிச்சீர் நான்கும் உள்ளன.

## காய்ச்சீர்:-

**அசை வாய்பாடு**
நேர் நேர் நேர் தேமாங்காய்
நிரை நேர் நேர் புளிமாங்காய்
நேர் நிரை நேர் கூவிளங்காய்
நிரை நிரை நேர் கருவிளங்காய்

## கனிச்சீர்:-

**அசை வாய்பாடு**
நேர் நேர் நிரை தேமாங்கனி
நிரை நேர் நிரை புளிமாங்கனி
நேர் நிரை நிரை கூவிளங்கனி
நிரை நிரை நிரை கருவிளங்கனி

## நாலசைச்சீர்:-

மூவசைச்சீர்கள் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாக இறுதியில் சேர்த்தால் நாலசைச்சீர்கள் மொத்தம் **பதினாறு** உருவாகும். நாலசைச்சீர்களைப் **பொதுச்சீர்** என்றும் வழங்குவர்.

## பூச்சீர்:-

**அசை வாய்பாடு**
நேர் நேர் நேர் நேர் தேமாந்தண்பூ

நிரை நேர் நேர் நேர் புளிமாந்தண்பூ
நேர் நிரை நேர் நேர் கூவிளந்தண்பூ
நிரை நிரை நேர் நேர் கருவிளந்தண்பூ
நேர் நேர் நிரை நேர் தேமாநறும்பூ
நிரை நேர் நிரை நேர் புளிமாநறும்பூ
நேர் நிரை நிரை நேர் கூவிளநறும்பூ

நிரை நிரை நிரை நேர் கருவிளநறும்பூ

**நிழற்சீர்:-**

**அசை வாய்பாடு**

நேர் நேர் நேர் நிரை தேமாந்தண்நிழல்
நிரை நேர் நேர் நிரை புளிமாந்தண்நிழல்
நேர் நிரை நேர் நிரை கூவிளந்தண்நிழல்
நிரை நிரை நேர் நிரை கருவிளந்தண்நிழல்
நேர் நேர் நிரை நிரை தேமாநறுநிழல்
நிரை நேர் நிரை நிரை புளிமாநறுநிழல்
நேர் நிரை நிரை நிரை கூவிளநறுநிழல்

நிரை நிரை நிரை நிரை கருவிளநறுநிழல்

## தளை:-

சீர்கள் ஒன்றோடொன்று கட்டுப்பட்டு நிற்கும் நிலை, தளை எனப்படும்.

தளை என்பதற்கு **கட்டு** என்று பொருள்.

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் அமைவது தளை எனப்படும். நின்ற சீரின் ஈற்றசையும்

வருஞ்சீரின் முதலசையும் நேர் முன் நேராகவும், நிரை முன் நிரையாகவும் வருவது ஒன்றி வருவதெனப்படும். அவ்வாறன்றி நேர் முன் நிரையும், நிரை முன் நேராகவும் வருவது ஒன்றாததெனப்படும்.

ஒன்றுதல் – பொருந்துதல்

ஒன்றாதது – பொருந்தாதது

## தளையின் வகைகள்:-

தளை **ஏழு** வகைப்படும். அவை:

1. நேரொன்றாசிரியத்தளை - மா முன் நேர் வருவது
2. நிரையொன்றாசிரியத்தளை - விள முன் நிரை வருவது
3. இயற்சீர் வெண்டளை - மா முன் நிரை, விள முன் நேர் வருவது
4. வெண்சீர் வெண்டளை - காய் முன் நேர் வருவது
5. கலித்தளை - காய் முன் நிரை வருவது
6. ஒன்றிய வஞ்சித்தளை - கனி முன் நிரை வருவது
7. ஒன்றாத வஞ்சித்தளை - கனி முன் நேர் வருவது

## அடி:-

சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும்.

## அடி வகைகள்:-

அடி **ஐந்து** வகைப்படும். அவை:

1. குறளடி
2. சிந்தடி
3. அளவடி
4. நெடிலடி
5. கழிநெடிலடி

## குறளடி:-

**இரண்டு** சீர்களாலான அடி குறளடி எனப்படும்.

**சான்று**:-

பொன்செய் மன்றில்வாழ்

## சிந்தடி:-

**மூன்று** சீர்களாலான அடி சிந்தடி எனப்படும்.

**சான்று**:-

வாய்மையால் காணப் படும்.

## அளவடி:-

**நான்கு** சீர்களாலான அடி அளவடி எனப்படும்.

**சான்று**:-

ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்

## நெடிலடி:-

**ஐந்து** சீர்களாலான அடி நெடிலடி எனப்படும்.

**சான்று**:-

வையம் ஏழுடை மன்னவன் அவ்வுரை வழங்க

## கழிநெடிலடி:-

**கழிநெடில் – மிக நீண்டது**

**ஐந்துக்கு மேற்பட்ட** சீர்களாலான அடி கழிநெடிலடி எனப்படும்.

**சான்று:-**

நாட்டோடு சேராத தனிபோக உரிமை

நடவாதிங்கு இனியென்று நாமறிதல் பெருமை.

## தொடை:-

தொடை என்பது தொடுக்கப்படுவது எனப் பொருள்படும். மலர்களைத் தொடுப்பது போலவே, சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது தொடை எனப்படும். **'தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்'** என்பது பழமொழி.

## தொடை வகைகள்:-

தொடை **ஐந்து** வகைப்படும். அவை:

1. மோனைத் தொடை
2. எதுகைத் தொடை
3. முரண் தொடை
4. இயைபுத் தொடை
5. அளபெடைத் தொடை

## மோனைத் தொடை:-

செய்யுளில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

**மோனை – முதன்மை**

**சான்று:-**

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு

## எதுகைத் தொடை:-

இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

**சான்று:-**

தோ**ன்**றின் புகழோடு தோ**ன்**றுக

## முரண் தொடை:-

அடிகளிலோ , சீர்களிலோ , சொல்லோ , பொருளோ முரண்பட்டு (மாறுபட்டு) அமைவது முரண் தொடை ஆகும்.

**சான்று:-**

**முற்**பகல் செய்யின் **பிற்**பகல் விளையும்

## இயைபுத் தொடை:-

செய்யுளின் அடிகளிலும், சீர்களிலும் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ ஒன்றி வருவது இயைபுத் தொடை எனப்படும்.

**சான்று:-**

அவனோ?, அவளோ?, அதுவோ?

## அணியிலக்கணம்:-

அணி என்றால் அழகு என்று பொருள். புலவர்கள் தம் மொழிப் புலமையாலும் கற்பனை ஆற்றலாலும் சொல்லிலும், பொருளிலும் அழகு சேர்த்துச் செய்யுள் இயற்றுகின்றனர். செய்யுளில் காணப்படும் இவ்வழகே அணி எனப்படுகிறது.

# அணிகள்:-

அணி சொல்லணி, பொருளணி என இரண்டு பெரும்பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது. பொருளணியின் வகைகளுள் சிலவற்றைக் காண்போம்.

## இயல்பு நவிற்சி அணி:-

உள்ளதை உள்ளவாறு, இயற்கைத் தன்மை மாறாத வகையில் அழகுறக் கூறுவதை இயல்பு நவிற்சியணி என்பர். இதனைத் தன்மை நவிற்சியணி என்றும் கூறுவர்.

**சான்று:-**

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

ஒரு காலத்தில் தம்முடைய துன்பத்தைப் போக்கியவரின் நட்பை, ஏழு பிறப்பிலும் பெரியோர் நினைத்துக் கொண்டேயிருப்பர் என்று பெரியோரின் உயர்பண்பை வள்ளுவர் இயல்பாகக் கூறியுள்ளார்.

## உவமை அணி :-

ஒரு பொருளை நேரடியாகக் கூறாமல், அதைக்காட்டிலும் உயர்ந்த தன்மையுடைய மற்றொன்றுடன் அதனை ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணியாகும்.

**சான்று:-**

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்

பிறை = உவமை
பெரியவர் கேண்மை = பொருள்
போல = உவம உருபு

வானத்தில் பிறை நிலவு நாள்தோறும் வளர்ந்து வருவதைப் போல நல்லவர்களின்நட்பு வளரும் என்பதே இக்குறளின் கருத்தாகும்.

நல்லவர்களின் நட்பு வளர்ந்து வரும் நிலவோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

## உருவக அணி:-

உவமைக்கும், உவமேயத்திற்கும் வேறுபாடு இல்லாமல் உவமையையே பொருளாகக் கூறுவது உருவக அணி எனப்படும்.

### சான்று:-

துன்பக் கடலகத்து அழுந்த வேண்டா

துன்பத்தைத் துன்பம் எனக் கூறாது, அது மிகுந்த அல்லற்படுத்தும் கடல் என உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. உவமேயப் பொருளாகிய துன்பம் என்னும் சொல் முன்னும், உவமைப் பொருளாகிய கடல் பின்னும் அமைந்துள்ளது.

## பிறிது மொழிதல் அணி:-

செய்யுளில் புலவர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல், அதனோடு ஒத்த வேறோன்றினைக் கூறி, அதிலிருந்து தாம் கூறக்கருதிய பொருளைப் பெற வைத்தல் பிறிது மொழிதல் அணி எனப்படும். இதனை ஒட்டணி என்றும் கூறுவர்.

## சான்று:-

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்

யானை பருத்த உடலையும், கூரிய கோடுகளையும் கொண்டது; இருந்தாலும் ஊக்கமுடைய உருவத்தில் சிறியதான புலி தாக்கினால் அதற்கு அஞ்சி நடுங்கும் என்பது இக்குறளின் பொருளாகும். இதன் மூலம் படைவலிமை கொண்ட அரசனாக இருந்தாலும், ஊக்கமில்லாதவனாக இருந்தால் பகைவரைக் கண்டு அஞ்ச நேரிடும் என்னும் கருத்தை அறிய முடிகிறது. இவ்வாறு உவமையை மட்டும் கூறி பொருளைப் பெற வைத்தலே பிறிது மொழிதல் அணியாகும்.

## நிறைவாகச் சில:-

ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு கொண்டுள்ள தொடர்பைப் பேணுவதற்கு மொழி அவசியமாகும். அம்மொழியின் பிரிவுகளான பேச்சு, எழுத்து மொழிகளுள் எழுத்து மொழி ஒரு மொழியின் செம்மையைப் பேணிக் காக்கிறது. தமிழ் இலக்கண அறிமுகத்தின் முதல் நிலையில் மேற்கண்ட கருத்துக்களை கவனத்தில் கொள்வோமேயானால் மொழியின் செம்மைத் தன்மைக்கு ஊறு விளையாது காக்க முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.